# 12

# உழ்ஹிய்யா, அகீகா

அல்லாஹ் எமக்களித்துள்ள அருட் கொடைகளுள் கால் நடைகளும் ஒன்றாகும். அவற்றை எமது பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த அவன் அனுமதித்துள்ளான். அவற்றுள் சில வவற்றை ''தப்ஹ்'' செய்து உண்ணவும் அனுமதித்துள்ளான். சில சந்தர்ப்பங்களில் அவற்றை ''தப்ஹ்''செய்து மாமிசத்தை தர்மம் செய்வதை 'இபாதத்'ஆகவும் ஆக்கியுள்ளான். **உழ்ஹிய்யாவும் அகீகாவும்** அவ்வாறானவைகளே.



## உழ்ஹிய்யா

ஹஜ் பெருநாள் தினத்தில் உழ்ஹிய்யா முக்கியத்துவம் பெறுவதால் இப்பெருநாள், 'ஈதுல் அழ்ஹா' என அழைக்கப்படுகின்றது.

உழ்ஹிய்யா, இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாக வாழ்க்கையை நினைவுபடுத் தும் ஓர் இபாதத் ஆகவும் விளங்குகின்றது. அது பற்றிச் சுருக்கமாகக் கவனிப்போம்.

இப்றாஹீம் (அலை) அவர்கள் முக்கியமான நபிமார்களில் ஒருவர். அவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தனர். ஒருவரது பெயர் இஸ்மாயீல், மற்றவரின் பெயர் இஸ்ஹாக்.

ஒரு நாள் தனது மூத்த மகன் இஸ்மாயீலை குர்பான் கொடுப்பதற்கு இப்றாஹீம் (அலை) அவர்கள் கனவு கண்டார்கள். அதனை அல்லாஹ்வின் கட்டளையாகக் கருதினார்கள். இது பற்றி மகன் இஸ்மாயீலிடம் கூறி அவரது அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளையாக இருப்பதால் அதனை நிறைவேற்றுமாறு இஸ்மாயீல் கூறினார். உடனே இப்றாஹீம் (அலை) அக்கட்டளையை நிறைவேற்றத் துணிந்தார். அறுப்பதற்காக மகனை அழைத்துச் சென்று முகம் குப்புற வீழ்த்தினார். அவருடைய அச்செயலை உடனடியாக அல்லாஹ் ஏற்றுக் கொண்டான்.

இஸ்மாயீலுக்குப் பகரமாக குர்பானி கொடுப்பதற்காக செம்மறி ஆடொன்றை இறக்கி வைத்தான். இப்றாஹீம் (அலை) அதனைக் குர்பான் செய்தார். தனது கட்டளைக்கு தந்தையும் மகனும் அடிபணிந்துவிட்டதாகக் கூறி அவ்விருவரையும் அல்குர்ஆனில் அல்லாஹ் அவற்றைப்

புகழ்கின்றான். அவ்விருவரினதும் தியாகம் எமக்கு வணக்கமாக ஆக்கப்பட்டுள்ளது. அவ்வணக்கத்தை நிறைவேற்றும் முகமாகவே உழ்ஹிய்யாக் கொடுக்கின்றோம்.

உழ்ஹிய்யாக் கொடுப்பது ஒரு சிறந்த ஸுன்னத்தான செயலாகும். ஆடு கொடுப்பதாயின், ஓர் ஆட்டை ஒருவர் கொடுக்க வேண்டும். மாடு கொடுப்பதாயின், ஏழு பேர் சேர்ந்து கொடுக்கலாம். நோயற்ற, ஆரோக்கியமான, இரண்டு வயதுக்குக் குறையாத பிராணியைக் கொடுப்பதே சிறந்தது. இதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை மாத்திரமே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

### உழ்ஹிய்யாவுக்குரிய காலம்

துல்ஹஜ் மாதம் 10ம் நாள் - ஹஜ் பெருநாள் தினம் (காலை பெருநாள் தொழுகையின் பின்)

துல்ஹஜ் மாதம் 11ம் நாள்
துல்ஹஜ் மாதம் 12ம் நாள் - அய்யாமுத் தஷ்ரீக் தினங்கள்
துல்ஹஜ் மாதம் 13ம் நாள்

## அகீகா

அகீகாவும் ஒரு ஸுன்னத்தான செயலாகும். இது, தமது பிள்ளைகளுக்காகப் பெற்றோரால், அல்லாஹ்வின் அருளை வேண்டி நிறைவேற்றப்படுகின்ற நற்காரியமாகும்.

ஆண்பிள்ளைக்கு இரண்டு ஆடுகளும் பெண் பிள்ளையாயின் ஓர் ஆடும் கொடுப்பது ஸுன்னத்தாகும். இதனை மாமிசமாகவோ உணவாகச் சமைத்தோ கொடுக்கலாம். தானும் உண்டு தனது உறவினர், நண்பர் மற்றும் ஏழைகளுக்கும் கொடுக்கலாம். ஏழைகளைப் புறக்கணிக்கக் கூடாது. உழ்ஹிய்யாவைப் போல ஏழு பேர் சேர்ந்து மாடொன்றை அகீகாவாகக் கொடுக்க முடியாது.

அகீகாவுடன் தொடர்பான விடயங்களைக் கீழ்க்காணும் நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.

‘‘சிறுவன் அவனுடைய அகீகாவைக் கொண்டு பணயம் வைக்கப்பட்டுள்ளான். பிறந்து ஏழாம் நாளில் அவனுக்காக அது அறுக்கப்படும். அன்று அவனுக்குப் பெயரும் வைக்கப்படும். அவனுடைய தலை முடியும் சிரைக்கப்படும்’’ (ஜாமிஉத் திர்மிதி).

உழ்ஹிய்யா, அகீகா என்பவற்றுக்கான பிராணிகள் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் அறுக்கப்பட வேண்டும். இது ‘தப்ஹ்’ என்று அழைக்கப்படும். இப்போது நாம் அது பற்றிக் கவனிப்போம்.

### தப்ஹ் செய்யும் (அறுக்கும்) முறை

உயிரினங்கள் யாவும் அல்லாஹ்வின் படைப்புக்களாகும். அவற்றுக்கு எம்மைப் போன்று உயிரும் உணர்வும் உள்ளன. மனிதன் அவற்றின் மூலம் பல பயன்களைப் பெறுகின்றான்.

எமது தேவைக்காகப் பயன்படுத்தும்போது அவற்றுடன் நாம் கருணையுடன் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும். அறுக்கும் பிராணிகளுக்கு எத்தகைய துன்பத்தையும் ஏற்படுத்தக் கூடாது.

அத்தகைய பிராணிகளை தப்ஹ் செய்யும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை இஸ்லாமிய சட்ட விதிகள் கூறிக் கொண்டிருக்கின்றன. அவற்றை இங்கே கவனிப்போம்.

- பிராணிகளை தப்ஹ் செய்யும்போது பிஸ்மில்லாஹ் எனக் கூறவேண்டும்.
- கத்தி கூர்மையானதாக இருக்க வேண்டும்.
- ஒரு பிராணியின் முன்னிலையில் மற்றொரு பிராணியை தப்ஹ் செய்யக் கூடாது.
- தப்ஹ் செய்யும் இடத்துக்கு மெதுவாக இழுத்துச் செல்ல வேண்டும்.
- பிராணிகளை தப்ஹ் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் வைத்தே அவற்றை தப்ஹ் செய்யவும், சுத்தம் செய்யவும் வேண்டும்.
- தப்ஹ் செய்த பிராணியை உரிக்க முன்னர் அதன் உயிர் பிரிந்து விட்டது என்பதை கண்டிப்பாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொழுகையுடன் சேர்த்து குர்பானி கூறப்பட்டுள்ளமையால், குர்பானியுடைய விஷயம் குர்ஆனில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் வசனத்தில் காண முடியும்.

"உமது இறைவனை நீர் தொழுது குர்பானியும் கொடுப்பீராக" (108:2)

எந்தக் குர்பானி ஆயினும் அது அல்லாஹ்வுக்காகவென்றே தப்ஹ் செய்யப்படவும், பகிரப்படவும் வேண்டும். இதனையே அல்குர்ஆனின் பின்வரும் வசனம் எடுத்துக் காட்டுகிறது.

(குர்பான் செய்யப்பட்ட) அவற்றின் மாமிசங்களோ, அல்லது அதன் இரத்தங்களோ ஒருபோதும் அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. எனினும், உங்கள் இறையச்சம்தான் அவனைச் சென்றடையும். (அல்குர்ஆன் 22:37)

**பயிற்சி:**

1. பிராணியை தப்ஹ் செய்யும் முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய 3 ஒழுங்குகளையும் தப்ஹ் செய்யும்போது பேண வேண்டிய 3 ஒழுங்குகளையும் பட்டியல்படுத்துக.
2. உழ்ஹிய்யா, அகீகா ஆகிய இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.